# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **புதுக்கவிதைகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# புதுக்கவிதைகள்

**புதுக்கவிதையின் தோற்றம்:**

எதுகை, மோனை தனிச்சொல் எனும் மரபுகளின்றி சீர், தளை கட்டுப்பாடின்றி கருத்துகளை வெளிப்படுத்துவது புதுக் கவிதையாகும். புதுக்கவிதையின் வேறுபெயர்கள் வசனகவிதை, யாப்பில்லா கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்கா கவிதை, உரைப்பா, உரை கவிதை.

- 1910 ஆம் ஆண்டு வால்டு விட்மன் "புல்லின் இதழ்கள்" (Leaves of grass) என்ற கவிதையை வெளியிட்டார்.
- வால்டு விட்மனைத் தொடர்ந்து புதுக் கவிதைக்கு ஆக்கம் தந்தவர் - எஸ்ராபவுண்ட் T.S. எலியட்.
- T.S. எலியட் எழுதிய பாழ்நிலம் என்ற நூலுக்கு நோபல் பரிசு கிடைத்தது. இதுவே புதுக்கவிதை உலகில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
- தமிழில் புதுக் கவிதைக்கு வித்திட்டவர் - பாரதியார்.
- தமிழ் கவிதைகளில் முதன் முதலாக உலகளாவிய பார்வையை வழங்கியவர் - பாரதியார்.
- பாரதி எழுதிய புதுக் கவிதை, காட்சி என்ற தலைப்பில் வெளியானது.
- புதுக்கவிதையின் முன்னோடி, பிதாமகன் என அழைக்கப்படுபவர் - ந. பிச்சமூர்த்தி.
- முதன் முதலில் புதுக்கவிதை வெளியிட்ட இதழ் - P.S ராமையாவின் மணிக்கொடி.
- புதுக்கவிதை வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்த இதழ்கள் - எழுத்து, காலமோகினி, நடை, கசடதபற, வானம்பாடி.
- புதுக்கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற நூலின் ஆசிரியர் - வல்லிக்கண்ணன்.
- புதுக்கவிதை இலக்கணம் என்ற நூலின் ஆசிரியர் - தேவிரா (எ) ராஜேந்திரன்.
- சங்க இலக்கியமான கலித்தொகையில் முல்லைக்கலியில் சோழன் நல்லுருத்திரனாரால் புதுக்கவிதையின் விதை விதைக்கப்பட்டுள்ளது எனக் கூறியவர் - பாரதியார்.
- பாரதியின் சந்திரிகை, "யான்", என்ற கவிதைகள் சானட் (SONNET) என்ற ஆங்கில கவிதை வடிவத்தைச் சார்ந்ததாகும்.
- புதுக் கவிதையை உரைப்பா எனக் கூறியவர் - பெருஞ்சித்திரனார்.
- புதுக் கவிதையை உரை வீச்சு எனக் கூறியவர் - சாலை இளந்திரையன்.
- புதுக் கவிதையை சொற்கோலம் எனக் கூறியவர் - கண்ணதாசன்.
- தமிழிலக்கிய உலகில் மரபுக் கவிதையின் பெரும்பகுதி இடத்தை பற்றிக் கொண்டது - புதுக் கவிதை.
- மன உணர்வுகளை மிகுதியாக பாடியவர்கள் - எழுத்துக்கால கவிஞர்கள்.
- சமுதாய உணர்வுகளை மிகுதியாக பாடியவர்கள் - வானம்பாடிக் கவிஞர்கள்.
- எழுத்துக் கால கவிஞர்கள் அகநிலைக் கவிஞர்கள்.
- வானம்பாடிக் கவிஞர்கள் புறநிலைக் கவிஞர்கள்.

**புதுக்கவிதையின் வளர்ச்சி:**

புதுக்கவிதை வளர்ச்சியை 3 காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. மணிக்கொடி காலம் - 1930 முதல் 1945 வரை
2. எழுத்து பரம்பரை - 1945 முதல் 1970 வரை
3. வானம்பாடி பரம்பரை - 1971க்கு பிந்தைய காலம்

**மணிக்கொடி காலம்:**

- நா.பிச்சமூர்த்தி, கு.பா.இராசகோபாலன், புதுமைப்பித்தன், க.நா.சுப்பிரமணியன், வல்லிக்கண்ணன்.

**எழுத்துக்கால கவிஞர்கள்:**

- எஸ். வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, மணி, சி.சு.செல்லப்பா

**வானம்பாடி காலம்:**

- ஈரோடு தமிழன்பன், மு.மேத்தா, மீரா, சிற்பி பாலசுப்பிரமணியம், வாலி, அப்துல் ரகுமான், இன்குலாப், வைரமுத்து, புவியரசு, நா.காமராசன், கங்கை கொண்டான், தமிழ்நாடான், அக்னிப்புத்திரன், சக்திகனல், ரவீந்திரன், ஞானி, பா. ஜெயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ. ராசாராம்

## நா.பிச்சமூர்த்தி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ந.வேங்கட மகாலிங்கம் |
| ஊர் | - | கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்) |
| காலம் | - | 15-08-1900 முதல் 04-12-1976 வரை |
| பெற்றோர் | - | நடேச தீச்ஷிதர், காமாட்சியம்மாள் |
| இயற்றிய நூல்கள் | - | கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள், காதல், கிளிகூண்டு, காட்டு வாத்து, கிளிகுஞ்சு, பூக்காரி, வழித்துணை, காக்கையும் கிளியும் (10 கதைகளின் தொகுப்பு) |
| பத்திரிக்கைப் பணி | - | அனுமன், நவஇந்தியா (துணையாசிரியர்), ஷேக்ஸ்பியர் சங்கம் (கதையாசிரியர்) |
| சிறப்புப் பெயர் | - | பிக்ஷி |

**சிறப்புகள்:**

- பாரதிக்குப் பின் கவிதை மரபில் மாற்றம் விளைவித்த கவிதைகள் - ந. பிச்சமூர்த்தி கவிதைகள்.
- ந. பிச்சமூர்த்தியின் கவிதைகளின் எண்ணிக்கை - 3.
- 1924 முதல் 1938 வரை வழக்குரைஞர் பணி.
- 1938 முதல் 1954 வரை கோயில் நிர்வாக அலுவலராக பணியாற்றினார்.

- ந.பிச்சமூர்த்தி (15.08.1900 முதல் 1976) அண்மைத் தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர்.
- தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் மராட்டி மொழிகளில் ஹிரிகாத கலாட்சேபம் செய்யுமளவிற்குத் தேர்ச்சி பெற்றவர் - ந. பிச்சமூர்த்தி.
- சைவ புராண பிரசகங்கள் செய்தவர் - ந. பிச்சமூர்த்தி.
- பிச்சமூர்த்தி கும்பகோணத்தில் தன் பள்ளி படிப்பையும், கல்லூரி படிப்பையும் முடித்தார். தத்துவத்தில் பட்டம் பெற்று, சென்னை சட்டக்கல்லூரியில் வழக்குரைஞர் பட்டம் பெற்றார்.
- நவ இந்தியா பத்திரிகையில் சிறிது காலம் பணியாற்றியவர் - ந.பிச்சமூர்த்தி.
- சுதேசமித்திரன், சுதந்திர சங்கு, தினமணி, மணிக்கொடி போன்ற பத்திரிக்கைகளில் கவிதை எழுதியவர் - ந. பிச்சமூர்த்தி.
- உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்திற்கும் முதல்வனாக விளங்குவது ஞாயிறு எனப் பாடியவர் - ந. பிச்சமூர்த்தி.

**சிறுகதைப் படைப்புகள்**

- பதினொட்டாம் பெருக்கு
- மோகினி
- மாங்காய் தலை
- காபூலிக் குழந்தைகள்
- விஜயதசமி

**சிறப்புகள்:**

- அற்பமான பெயர்களைக் கொண்டு அழைத்து வந்தால் காலன் அழைத்துச் செல்லமாட்டான் என்ற நம்பிக்கையின் காரணமாக இவரை பிச்சை என்று அழைத்தனர். பின்னாளில் பிச்சை, பிச்சமூர்த்தி ஆனார்.
- ஸ்ரீராமானுஜர் என்னும் திரைப்படத்தில் ஆளவந்தார் வேடமேற்று நடித்தவர் - ந.பிச்சமுர்த்தி.
- ஆன்மீக விஷயங்களிலும், துறவிலும் நாட்டம் கொண்டவர் - ந. பிச்சமூர்த்தி.
- இவரின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
- பாரதி "காட்சி" என்ற பாடல் மூலம் வசன கவிதை தொடங்கினார். அதனைப் புதுக்கவிதை இயக்கமாக தோற்றுவித்தவர் - ந.பிச்சமுர்த்தி.
- வால்ட்விட்மன், பாரதி ஆகியோரை முன்னோடியாகக் கொண்டவர் - ந.பிச்சமுர்த்தி.
- மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் கவிதை எழுதினார் - ந. பிச்சமுர்த்தி.
- ந.பிச்சமூர்த்தியின் முதல் சிறுகதை - ஆனந்தா (1938-ல் மணிக்கொடியில் வெளியானது).
- 1934 இல் காதல் என்ற இவர்தம் முதல் கவிதை வெளியானது.
- 1937 இல் கிளிக்கூண்டு தினமணிக் கதிரில் வெளியானது.

- ❖ 1962 இல் 35 கவிதைகள் அடங்கிய "காட்டு வாத்து" என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்தது.

**மேற்கோள்:**

- "நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது
  நீ தந்த நெற்கதிர் இது **- ந. பிச்சமூர்த்தி**

- நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ,
  ஒளியுண்டோ, நிலவுமுண்டோ **- ந. பிச்சமூர்த்தி**

- காமனை எரித்த ருத்திரன்
  கண்சிமிட்டில் தணிந்து போவான் **- ந. பிச்சமூர்த்தி**

**புகழுரை:**

- ❖ புதுக்கவிதையின் இரட்டையர்கள் ந.பிச்சமூர்த்தி, கு.ப.இராசகோபாலன் எனக் கூறியவர் - வல்லிக்கண்ணன்

## சி.சு.செல்லப்பா

| | | |
|---|---|---|
| ஊர் | - | சின்னமனூர் (தேனி மாவட்டம்) |
| காலம் | - | 29.09.1912 முதல் 18.12.1998 வரை |
| இயற்றிய நூல்கள் | - | இயற்றிய நூல்கள் - மாற்று இதயம் (கவிதைத் தொகுப்பு), சரசாவின் பொம்மை, மணல்வீடு, அறுபது, சத்தியாகரசி, வெள்ளை சிறுகதை என்ற ஐந்து தொகுதிகள், வாடிவாசல், ஜீவனாம்சம், சுதந்திரதாகம், நீ இன்று இருந்தால், புதுக்குரல் |
| சிறப்புப் பெயர் | - | புதுக்கவிதை புரவலர் |

**சிறப்புகள்:**

- ❖ மதுரைக் கல்லூரியில் பி.ஏ.இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- ❖ காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர் - சி.சு.செல்லப்பா.
- ❖ 1947 - 1953 வரை தினமணிக் கதிரில் பிரபல எழுத்தாளர் துமிலனுக்கு உறுதுணையாக பணியாற்றியவர் - சி.சு. செல்லப்பா.
- ❖ 1958 எழுத்து இதழை தொடங்கியவர் - சி.சு. செல்லப்பா.
- ❖ சுதந்திர சங்கு என்ற இதழில் முதல் முதலாக எழுதத் தொடங்கியவர் - சி.சு. செல்லப்பா.
- ❖ மணிக்கொடி என்ற இதழ் இவரின் படைப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியது.
- ❖ சிறந்த எழுத்தாளராக சி.சு.செல்லப்பாவை அறிமுகப்படுத்திய சிறுகதை - சரசாவின் பொம்மை.

- மணிக்கொடி கலாமோகினி இதழ்கள் நின்று போனதால் மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு உறுதுணையாக நின்ற இதழ் - எழுத்து (119 இதழ்கள் மட்டுமே வெளிவந்தன)
- தமிழ் சிறு பத்திரிக்கைகளின் முன்னோடி இதழ் - எழுத்து.
- **புதுக்கவிதை:** மாற்று இதயம்
- **சிறுகதைகள் :** சரசாவின் பொம்மை, மணல்வீடு, அறுபது, சத்தியாகரசி, வெள்ளை என்ற ஐந்து தொகுதிகள்.
- **நாவல் :** வாடிவாசல், ஜீவனாம்சம், சுதந்திரதாகம்
- **விமர்சனம்:** தமிழ் இலக்கிய விமர்சனம், தமிழ் சிறுகதை பிறக்கிறது.
- **குறுங்காவியம்:** இன்று நீ இருந்தால் (மகாத்மா காந்தி பற்றிய காவியம்)

## தருமு. சிவராமு

| | | |
|---|---|---|
| பெயர் | - | தருமு. அருப் சிவராமு |
| சிறப்புப் பெயர்கள் | - | பிரமிள், பானுசந்திரன், அரூப் சிவராம் |
| ஊர் | - | திரிகோணமலை (இலங்கை கிழக்கு மாகாணம்) |
| காலம் | - | 20 - 04 - 1939 |
| இயற்றிய நூல்கள் | - | புதுக்கவிதை, கவிதை, விமர்சனம், சிறுகதை, ஓவியம், சிற்பம் |
| விருதுகள் | - | கும்பகோணம் நீலக்குயில், புதுமைப்பித்தன் வீறுவிருது, நியூயார்க் விளக்கு அமைப்பின் புதுமைப்பித்தன் விருது |

**சிறப்புகள்:**

- பாரதி புதுமைப்பித்தனுக்கு பிறகு தோன்றிய இலக்கிய மேதை - தருமு. சிவராமு.
- எழுத்து பத்திரிக்கையின் மூலம் எழுத துவங்கிய பிரமிள் நவீன தமிழுலகில் தனக்கென தனி இடம் பிடித்தார்.
- ஓவியம், சிற்பம், நாடகம், மொழியாக்கம் என பல துறைகளில் புலமைப் பெற்றவர் - தருமு. சிவராமு.
- மௌனியின் கதைத் தொகுப்பிற்கு இளம் வயதிலேயே முன்னுரை எழுதியவர் -
- தருமு. சிவராமு.
- கவிதைக் கோட்பாடுகளும் பாரதிக்கலையும் எனும் கட்டுரை எழுதியவர் -
- தருமு. சிவராமு

**எழுதிய நூல்கள்:**

- **குறுநாவல்கள்:** ஆயி (1990), லங்காபுரி ராஜா, பிரசன்னம்
- **நாடகம் :** நட்சத்திரவாசி -1993
- **பிறநூல்கள் :** கைப்பிடியளவு கடல் - 1976, தமிழின் நவீனதத்துவம் 1986, மீறல் - 1993, மார்க்சும் மார்க்ஸீயமும் - 1999, பீட்டர் ஓர்ஸ்லி, மேல் நோக்கிய பயணம்-1980, பாதையில்லா பயணம், வெய்யிலும் நிழலும் (இலக்கிய விமர்சன கட்டுரை), யாழ் கவிதைகள், காலவெளி கவிதை (அறிவியல் கட்டுரை), பிரமிள் கவிதைகள், தியானதாரா, வானமற்றவெளி, விடுதலையும் கலாச்சாரமும், விமர்சன ஊழல்கள், விமர்சன மீட்சிகள், விமர்சனாஸ்வரம், ஸ்ரீலங்கா -வின் தேசியத் தற்கொலை.

**புகழுரை:**

❖ பிரமிள் விசித்திரமான படிமவாதி எனக் கூறியவர் - சி.சு. செல்லப்பா
❖ உரைநடையின் அதிக பட்ச சத்தியத்தை நிறைவேற்றியவர் தருமு சிவராமு எனக் கூறியவர் - சி.சு. செல்லப்பா.
❖ தமிழின் மாமேதை பிரமிள் எனக் கூறியவர் - T. ஜானகிராமன்

## பசுவய்யா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சுந்தர ராமசாமி |
| காலம் | - | 30-05-1931 முதல் 14-10-2005 வரை |
| ஊர் | - | மகாதேவர்கோயில் (நாகர்கோயில் கன்னியாகுமரி மாவட்டம்) |
| மனைவி | - | கமலா |
| இயற்றிய நூல்கள் | - | ஒருபுளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக |
| சிறப்புப் பெயர் | - | பசுவய்யா, சிறந்த படிமக் கவிஞர் |

❖ நவீன தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர் மற்றும் கவிஞர் என்று பல பரிமாணங்களைக் கொண்டவர் - சுந்தர ராமசாமி.
❖ தன் இளைமைப் பருவத்தில் சாந்தி என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் தொ.மு.சி. ரகுநாதனிடம் மிகுந்த ஆர்வத்தை கொண்டிருந்தவர் - சுந்தர ராமசாமி.
❖ தொ.மு.சியினால் மார்க்ஸிட் தத்துவங்களிலும் ஈர்க்கப்பட்டவர் - சுந்தர ராமசாமி.
❖ தொ.மு.சி. ஆசிரியராக இருந்த சாந்தி என்ற பத்திரிகையில் கவிதை எழுதத் தொடங்கியவர் - சுந்தர ராமசாமி.
❖ கனடாவின் தமிழ் இலக்கிய தோட்டம் என்ற அமைப்பு சுந்தர ராமசாமி பெயரில் தமிழ் கவிதைக்கான விருதுகளை வழங்குகிறது.
❖ நெய்தல் இலக்கிய அமைப்பு இளம் படைப்பாளிகளுக்கு சுந்தர ராமசாமி விருதினை ஆண்டுதோறும் வழங்குகிறது.

**புகழ் பெற்ற நாவல்கள் :**

- ஒரு புளியமரத்தின் கதை
- ஜே.ஜே. சில குறிப்புகள்
- குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

**கவிதை தொகுப்புகள்:**

❖ நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக.
❖ இவருடைய கவிதைகளின் முழுத் தொகுப்பு 107 கவிதைகள் என்ற தொகுப்பில் வெளியாகியுள்ளது.

**சிறுகதைகள்:**

❖ அக்கரை சீமையில், தண்ணீர் அடைக்கலம், அகம், ஸ்டாம்பு ஆல்பம், லவ்வு, கைக்குழந்தை, பிரசாதம், செங்கமலமும் ஒரு சோப்பும், கிடாரி, பக்த துளசி, ஒரு நாய்,

ஒரு சிறுவன், ஒரு பாம்பு, லீலை, தயக்கம், பள்ளம், டால்ஸ்டாய் தாத்தாவின் கதை, அந்த ஐந்து நிமிடங்கள்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

- ❖ மலையாளத்தில் தகழி எழுதிய செம்மீன், தேரோட்டியின் மகன் என்ற இரு நாவலையும் தமிழில் மொழி பெயர்த்தவர் - பசுவைய்யா

**விமர்சனக் கட்டுரைகள்:**

- ❖ ஆஞுமைசர், மதிப்பீடுகள், காற்றில் கரைந்த பேராசை, வானகமே, இள வெய்யிலே, மரச்செறிவே

## கவிஞர் இரா.மீனாட்சி

- ❖ இயற்றிய நூல்கள் - உதய நகரிலிருந்து, நெருஞ்சி, தீபாவளிப் பகல், மறுபயணம், மீனாட்சி கவிதைகள், வாசனைப் புல், கொடிவிளக்கு, செம்மண் மடல்கள், பறத்தல் அதன் சுதந்திரம், சுடு பூக்கள்.
- ❖ கவியோகி சுத்தானந்த பாரதி தலைமையில் 1982 ல் நடந்த கவி அரங்கில் கவிதைப் பாடியவர் - இரா. மீனாட்சி.
- ❖ சி.சு.செல்லப்பாவின் எழுத்து காலத்தில் இருந்து எழுதத் தொடங்கி இன்று வரை தொடர்ந்து எழுதி வருகிறார்.
- ❖ 1978 ல் கோவை அவினாசியில் உள்ள அரசு உயர்நிலை பள்ளியில் முதன் முறையாக பாரதி சிலை வைக்க அரசாணை பெற்று சிலை நிறுவி பாரதியார் நூற்றாண்டு விழாவை நடத்தினார்.
- ❖ ஐ.நா.அமைப்பின் யுனெஸ்கோ(UNESCO) பங்களிப்போடு தமிழ் மரபு, கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழி பாதுகாப்பு ஆகியவைகளில் இளைஞர்களுக்கு நெறியாளராக பணியாற்றியவர் - இரா. மீனாட்சி.
- ❖ 2006 மார்ச்-ல் ஆப்பிரிக்க இந்திய இளைஞர்களுக்கு இடையே நட்புறவு பாலமாக ஆரோவில் இளைஞர்கள் கல்வி மையத்தை உருவாக்கினார்.
- ❖ 2008ல் சாகித்ய அகாடமியுடன் இணைந்து வருங்கால கவிதையும் கவிதையின் வருங்காலமும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியவர் - இரா. மீனாட்சி
- ❖ நவீன தமிழ் இலக்கியத்திலும் புதுக்கவிதை படைப்பிலும் குறிப்பிடத்தக்கவர் - இரா. மீனாட்சி.
- ❖ தற்போது ஆரோவில் சர்வதேச நகரத்தில் தொண்டாற்றி வருகிறார்.
- ❖ இவர் எழுதிய உதய நகரிலிருந்து என்னும் நூல் தமிழ்வளர்ச்சித் துறையின் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசினைப் பெற்றது.

**ஆய்வு நூல்கள்:**

- ❖ புனித சமையல், பனைமரமும் நாட்டுப்புற மக்களும், அருகி வரும் மாட்டுவண்டி, மொழிவளம் பெற தமிழில் கடித இலக்கியம், சிறுபாணன் சென்ற வழி.

**தொகுப்பு நூல்கள்:**

- ❖ பிறத்தல் அதன் சுதந்திரம், கொங்கு தேவர் வாழ்க்கை, சிற்றகல்

**விருதுகள்:-**

- ❖ 1995 ஆம் ஆண்டு ஐ.நா. பொன் விழாவை ஒட்டி ஆரோவிற்கு வழங்கப்பட்ட நட்பு பரிசினைப் பெற்றவர் - இரா. மீனாட்சி.
- ❖ 2005 ஆம் ஆண்டு கவிஞர் சிற்பி இலக்கிய விருது பெற்றவர் - இரா. மீனாட்சி.
- ❖ பூ.சா.கோ.நாவலர் மன்றத்தின் சார்பாக வழங்கப்படும் சிறந்த கல்லூரி பேச்சாளருக்கான தங்கப்பதக்கம் பெற்றவர் - இரா. மீனாட்சி.
- ❖ 2007-ல் கல்லாடனார் இலக்கிய விருதினை பெற்றவர் - இரா. மீனாட்சி.
- ❖ 2007 ஆம் ஆண்டு திருப்பூர் தமிழ்ச் சங்க விருதினைபெற்றவர் - இரா. மீனாட்சி.
- ❖ 2010ம் ஆண்டு புதுவை பாரதி விருதையும், கவிக்கோ விருதையும் பெற்றவர் - இரா. மீனாட்சி.

**தமிழ்ப் பணி:**

- ❖ சாகித்ய அகாடமியின் தமிழ் ஆலோசனை குழுவில் உறுப்பினராக பணியாற்றியவர் - இரா. மீனாட்சி.
- ❖ ஸ்ரீஅரவிந்தோ பன்னாட்டு கல்வி மையத்தின் பொறுப்பு உறுப்பினராக பணியாற்றியவர் -இரா. மீனாட்சி.
- ❖ ஆரோவிலிருந்து வெளியாகும் கிராமச் செய்தி மடல் என்ற மாத இதழின் ஆசிரியர் - இரா. மீனாட்சி.
- ❖ ஆரோவிலுள்ள சங்கமம் குடியிருப்பு திட்டத்தின் அரங்காவலர் - இரா. மீனாட்சி.

## சி.மணி

- ❖ இயற் பெயர்- பழனிச்சாமி.
- ❖ எழுத்து இதழில் தொடக்க கால எழுத்தாளர் - சி. மணி.
- ❖ பாலியல் போக்கினை மிகுதியாக கவிதைகளில் கையாண்டவர் - சி. மணி.
- ❖ பச்சையம் என்ற நூலின் ஆசிரியர் - சி. மணி.
- ❖ நகரம் என்ற நெடுங்கதை தொகுப்பை வெளியிட்டவர் - சி. மணி.
- ❖ வாழ்க்கையில் அனைத்து நிகழ்வுகளையும் கவிதையாக்கும் பாங்கு கொண்டவர்.
- ❖ பிராய்புன் கோட்பாடுகளில் நம்பிக்கையுடையவர் - சி. மணி.
- ❖ எலியட்டின் சிந்தனைகளால் கவரப்பட்டு அவரது பாழ்நிலத்தை மொழியாக்கம் செய்தவர் - சி. மணி.

**விருதுகள்:**

- ❖ 2002 ம் ஆண்டிற்கான விளக்கு இலக்கிய பரிசினைப் பெற்றவர் - சி. மணி.
- ❖ தஞ்சை தமிழ் பல்கலைக்கழக விருது, கவிஞர் சிற்பி விருது, ஆசான் கவிதை விருது.

**இயற்றிய நூல்கள்:**

- வரும்போகும், ஒளிச்சேர்க்கை, கொலைகாரர்கள், யாப்பும் கவிதையும் (விமர்சன நூல்).
- இதுவரை, டேனிடா செயல்முறைத் திட்டம், தாவோ தேஜிங்.

**மேற்கோள்:**

"அவன் வீட்டு சாக்கடையில் அடுத்த வீட்டு
நாய்படுத்துப் புரளுவது ஒரு வழக்கமாச்சு"

## சிற்பி பாலசுப்பிரமணியம்

| | | |
|---|---|---|
| ஊர் | - | ஆத்துப் பொள்ளாச்சி (கோவை) |
| பெற்றோர் | - | பொன்னுசாமி, கண்டியம்மாள் |
| காலம் | - | 29.07.1936 |
| இயற்றிய நூல்கள் | - | சிரித்த முத்துக்கள், நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஆதிரை, புன்னகைபூக்கும் பூனைகள், நீலக்குருவி |
| உரைநடை நூல்கள் | - | இலக்கியச் சிந்தனை, மலையாளக் கவிதை, அலையும் சுவடும், ஒரு கிராமத்து நதிக்கரையில். |

**சிறப்புகள்:**

- கேரள மாநிலம் பாலக்காட்டில் தத்தமங்கலம் உயர்நிலைப் பள்ளியில் பயின்றவர் - சிற்பி.
- திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றவர் - சிற்பி.
- அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழ் பட்டம் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்துறை தலைவராக பணியாற்றியவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- ஆங்கிலம், கன்னடம், இந்தி, மலையாளம் மற்றும் மராத்திய மொழிகளில் சிற்பியின் கவிதைகள் வெளிவந்தன.
- சாகித்திய அகாடமி மற்றும் ஞானபீட தொகுப்புகளில் பாலசுப்பிரமணியம் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- வானம்பாடி பரம்பரையைச் சார்ந்தவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- ஒரு கிராமத்து நதி நூலுக்கு சாகித்திய அகாடமி விருது பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- தமிழக அரசின் பாவேந்தர் பரிசு மற்றும் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தின் ஆங்கில இலக்கிய நூல் பரிசு பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேற்றழகர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- சொல்லை தேர்ந்து செதுக்கி தமிழ்பாடல் ஆக்கும் சிற்பி - சிற்பி பாலசுப்பிரமணியம்.

**விருதுகள்:**

- "பூஜியங்களின் சங்கிலி" என்ற நூலிற்காக தமிழக அரசின் பரிசினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- "லலிதாம்பிகா அந்தர் ஜனம்" என்பவர் மலையாளத்தில் எழுதிய நாவலை அக்னி சாட்சி என்ற பெயரில் மொழி பெயர்த்தவா் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- அக்னி சாட்சி என்ற நாவலுக்கு 2000ஆம் ஆண்டில் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- ஒரு கிராமத்து நதிக்கரையில் என்னும் நூலுக்கு 2002 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- தமிழ் இலக்கிய உலகில் இரு முறை சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றவர் என்ற பெருமைக்கு உரியவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- தமிழக அரசின் பாவேந்தர் விருதினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய நூல் பரிசினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- தமிழக அரசின் கலைமாமணி விருதினைப் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.
- குன்றக்குடி அடிகளாரால் கவிஞர்கோ பட்டம் பெற்றவர் - சிற்பி பாலசுப்பிரமணியம்.

**மேற்கோள்:**

- முன்னால் தெரிவது முத்துக் கொண்டைச்
- சோளக்கொல்லை பக்கத்தில் இருப்பது - ஒளிப்பறவை **- சிற்பி சுப்பிரமணியம்**

## மு.மேத்தா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | முகமது மேத்தா |
| ஊர் | - | தேனி மாவட்டம் பெரியகுளம் |
| காலம் | - | 05.09.1945 |
| இயற்றிய நூல்கள் | - | கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், மனச் சிறகு, முகத்துக்கு முகம், வெளிச்சம் வெளியே இல்லை, அவர்கள் வருகிறார்கள், நடந்த நாடகம், காத்திருந்த காற்று, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், தேசபிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி, நந்தவன நாட்கள், ஒரு வானம் இரு சிறகு, இதயத்தின் நாற்காலி. |
| விருதுகள் | - | ஆகாயத்தில் அடுத்த வீடு -புதுக்கவிதை (2006 - சாகித்ய அகாடமி) |
| ஊர்வலம் | - | தமிழக அரசின் பரிசு பெற்ற கவிதைத் தொகுப்பு சோழ நிலா-வரலாற்று நாவல் (ஆனந்த விகடன் நடத்திய பொன்விழா இலக்கியப் பரிசு) |

**சிறப்புகள்:**

- படிமக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் (உருவகக் கவிஞர்) - மு. மேத்தா.

- ❖ சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் பேராசிரியர் - மு. மேத்தா.
- ❖ உவமை உருவகங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்தவர் - மு. மேத்தா.
- ❖ காதல் சோகமும், தமிழ் தாகமும், இழையோடும் சமூக விமர்சனங்களையும் கவிதையாக்கியவர் -மு. மேத்தா.
- ❖ கண்ணீத் துளிகளை கண்ணீர்ப் பூக்களாக வர்ணித்தவர் -மு. மேத்தா.
- ❖ பாவேந்தர்பாரதிதாசன் விருதுபெற்றவர் - மு. மேத்தா.
- ❖ வானம்பாடிக்கவிஞர்களில் தனக்கென ஒரு தனியிடம் பிடித்தவர் - மு. மேத்தா.
- ❖ சமூக விசர்சனத் தோனியில் புகழ்தேடி தந்த கவிதை - தேசபிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி.
- ❖ **தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்:** ஊர்வலம்.
- ❖ **மரபுக் கவிதை நூல்:** மனச் சிறகு.
- ❖ **கவியரங்கக் கவித் தொகுதி :** முகத்துக்கு முகம்.
- ❖ **சிறுகதை:** அவளும் நட்சத்திரந்தான்.
- ❖ **வரலாற்று நாவல்:** சோழ நிலா.
- ❖ **சாகத்திய அகாடமி விருது வெற்றிநூல்:** ஆகாயத்தில் அடுத்த வீடு (புதுக்கவிதை).

**மேற்கோள்:**

- நான் வெட்ட வெட்ட தழைப்பேன்
  இறப்பினில் கண் விழிப்பேன்"

- "மரங்களில் நான் ஏழை
  எனக்கு வைத்த பெயர் வாழை"

- "விழிகள்
  நட்சத்திரங்களை வருடினாலும்
  விரல்கள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடு தான்"

- "உலகெங்கும் இதழ் இதழாக
  இந்த பூக்கள்
- உன்னுடைய படங்கள் ஊர்வலம் போகின்றன
  நீயேன் தலைகுனிந்தபடி நடுத்தெருவில் நிற்கிறாய்?
- ஆபுத்திரனே
  அமுத சுரபியைத்தான் நீ தந்து சென்றாய்
  இப்போது எங்கள் கையில் இருப்பதோ பிச்சைப் பாத்திரம் **- மு. மேத்தா**

- "இலக்கணச் செங்கோல்
  யாப்புச் சிம்மாசனம்
  எதுகை பல்லக்கு
  மோனைத் தேர்கள்
  தனிமொழிச் சேனை"

## ஈரோடு தமிழன்பன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ஜெகதீசன் |
| ஊர் | - | சென்னிமலை (ஈரோடு) |
| பெற்றோர் | - | நடராஜன்-வள்ளியம்மாள் |
| காலம் | - | 28.09.1940 |
| சிறப்புப் பெயர் | - | விடிவெள்ளி, படிமக் கவிஞர் |
| இயற்றிய நூல்கள் | - | தோணி வருகிறது, விடியல் விழுதுகள், சூரிய பறவைகள், வணக்கம் வள்ளுவா, நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், காலத்திற்கு ஒருநாள் முந்து, பொதுவுடைமைப் பூபாளம், சிலிர்ப்புகள், திரும்பி வந்த தேர்வலம், மன்மினி காடு, நிலா வரும் நேரம், கருவரையிலிருந்து ஒரு குரல், ஊமை வெயில், தீவுகள் கரையேறுகின்றன, சிறகுகள். |
| விருதுகள் | - | வணக்கம் வள்ளுவா (சாகித்ய அகாடமி) தமிழன்பன் |
| கவிதைகள் | - | (மரபுக்கவிதை) தமிழக அரசின் பரிசு. |

**சிறப்புகள்:**

- சென்னை புதுக்கல்லூரியில் தமிழ் பேராசிரியரர் பணியாற்றியவர் - ஈரோடு தமிழன்பன்.
- கவிதை உலகில் இவரை நிலை நிறுத்திய புதுக்கவிதை தொகுப்பு - தோணி வருகிறது (1973).
- சாகித்ய அகாடமியும், ஞானபீட அமைப்பும் ஈரோடு தமிழன்பனின் கவிதைகளை மொழிப் பெயர்த்துள்ளன.
- மரபில் பூத்துப் புதுமையில் கனிந்தவர் எனப் புகழப்பட்டவர் - ஈரோடு தமிழன்பன்.
- சூரிய பிறைகள் எனும் ஹைக்கூ கவிதைப் படைத்தவர் - ஈரோடு தமிழன்பன்.
- மரபுக்கவிதையில் மாபெரும் பெற்றியும் விருதும் பெற்றபிறகு, புதுக்கவிதைத் துறையில் முதன்மை பெற்று முன்னணியில் திகழ்ந்தவர் - ஈரோடு தமிழன்பன்.
- சொல்லாட்சியிலும் படிமக் குறியீட்டுப் பிரயோக மாட்சியிலும் சிறந்து விளங்கியவர் - ஈரோடு தமிழன்பன்.
- புதியதோர் உலகு செய்யும் செயல்படு மனத்தர், கவியரங்கக் கவிஞர் - ஈரோடு தமிழன்பன்.
- வாழ்க்கையையும் மரணத்தையும் ஒப்பிடும் இரண்டு வரிக் கவிதையைக் குறள் போல் இயற்றியவர் - ஈரோடு தமிழன்பன்.
- ஆயிரம் அரங்கம் கண்டவர் - ஈரோடு தமிழன்பன்.
- உருவகம், கருத்து சொல் முரண்கள், கனிவான இனிய குரல், சுவையாக உயிர்ப்புடன் படைக்கும் பாங்கு, பாட்டரங்கில் தனித்திறன் காட்டும் தனிபாணி, நாட்டும் நாயகர் - ஈரோடு தமிழன்பன்.

**கவிதைகள் :**

❖ வெளியேற்றம், கவிதைக் கலை, ஈழச்சாவுகளும் சவனமற்ற எழுத்துக்களும், உழைப்பின் உயர்வு, புரட்சி, மலர் பூத்து குலுங்க வேண்டும், வன்முறை, நீ எங்கே இருக்கிறாய்? அகல் விளக்கம், வரலாற்றுக்கு ஒரு பாடம்.

**மேற்கோள்:**

- சதை திரண்ட
  உன் வார்த்தைகளின் ஈரம்
  கலகலத்து ஓடுகிறது எங்கள்
  உள்ளங்களில்

- வாழ்க்கை அந்நிய மொழியில்
  மரணம் தாய் மொழியில் **- ஈரோடு தமிழன்பன்**

## கவிக்கோ அப்துல் ரகுமான்

| | | |
|---|---|---|
| ❖ ஊர் | - | மதுரை |
| ❖ காலம் | - | 02.11.1937 |
| ❖ பெற்றோர் | - | உருதுக் கவிஞர் மஹி (எ) சையத் அஹமத், ஜைனத் பேகம் |
| ❖ இயற்றிய நூல்கள் | - | பால் வீதி, நேயர் விருப்பம்,சொந்தச்சிறைகள், கரைகளே நதியாவதில்லை, தீபங்கள் எரியட்டும், விலங்குகள் இல்லாத கவிதை, ஆலாபனை, பித்தன்,சுட்டுவிரல்,தீக்குச்சிகள், அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப் புள்ளி அல்ல, உன் கண்ணில் தூங்கிக் கொள்கிறேன், புதுக்கவிதையின் குறியீடு |
| ❖ கட்டுரைகள் | - | சிலந்தியின் வீடு, பறவையின் பாதை, இல்லையிலும் இருக்கிறான், எம்மொழி செம்மொழி, தேவகானம் |
| ❖ பதிப்பித்த நூல்கள் | - | குணங்குடியார் பாடல் கோவை |
| ❖ விருதுகள் | - | பாரதிதாசன் விருது,தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருது |

**சிறப்புகள்:**

❖ மதுரை தியாகராசர் கல்லூரியில் பயின்றவர் - அப்துல் ரகுமான்.

❖ வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்.

❖ மரபுக்கவிதையின் வேர் பார்த்தவர் புதுக்கவிதையின் மலர் பார்த்தவர் -கவிக்கோ அப்துல் ரகுமான்.

❖ புதுமை மணங்கமழும் படைப்புகளை தந்தவர் - அப்துல் ரகுமான்.

❖ அப்துல் ரகுமானின் சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல் -ஆலாபனை.

❖ கவிக்கோ என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுபவர் - அப்துல் ரகுமான்.

- ❖ மாணவர்களை புதுக் கவிதை எழுதத் தூண்டியவர் - அப்துல் ரகுமான்.
- ❖ தொன்மம் என்ற இலக்கிய யுக்தியை மிகுதியாக கையாண்டவர் - அப்துல் ரகுமான்.
- ❖ பால்வீதி என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டவர் -அப்துல் ரகுமான்.
- ❖ கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் மூலம் வெளியிட்டவர் - அப்துல் ரகுமான்.
- ❖ தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர் - அப்துல் ரகுமான்.
- ❖ தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை இயற்றியதிலும் பரப்பியதிலும் பெறும் பங்கு பெற்றவர் - அப்துல் ரகுமான்.
- ❖ எளிய சொற்களால் இனிமைதரும் கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர் - அப்துல் ரகுமான்.
- ❖ திருக்குறளை புதுக்கவிதையாக்கி அழகு பார்த்தவர் - அப்துல் ரகுமான்.
- ❖ சிலேடை வார்த்தைகளாலும், கவியரங்க கவிதைகளாலும் 1960க்கு பின் கவிதை உலகில் சிறந்து விளங்கியவர் - அப்துல் ரகுமான்.
- ❖ அறிவுமதி உள்ளிட்ட இளம் தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கியவர் - அப்துல் ரகுமான்.
- ❖ முனைவர் மா. இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி, அ.கி.பரந்தாமனார் அவ்வை நடராசன், அ.மு.பரமசிவானந்தம் ஆகிய தமிழறிஞர்களிடம் பயின்றவர் - அப்துல் ரகுமான்
- ❖ தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் தியாகராசர் நடத்திய தமிழ்நாடு என்னும் நாளிதழில் திருத்துநராகச் சிலகாலம் பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்.
- ❖ வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் 1961 ஆம் ஆண்டு முதல் சிற்றுரையாளர், விரிவுரையாளர்,பேருரையாளர், பேராசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்து 1991 ஆம் ஆண்டில் விருப்ப ஓய்வு பெற்றவர் - அப்துல் ரகுமான்.
- ❖ 20 ஆண்டுகள் தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்
- ❖ தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவராக 2009 மே முதல் 2011 வரை பணியாற்றியவர் - அப்துல் ரகுமான்.

**மேற்கோள்:**

- "புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
  போலி நளன்களின் கூட்டம்
  கையில் மாலையுடன்
  குருட்டுத் தமயந்தி "

- "உன் தராசுத்தட்டுகளை
  கொஞ்சம் கண் திறந்து பார்
  புறாவின் மாமிசத்தை
  சிபிகள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்"

- கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
  எழுதேம் கரபாத் கறிந்து **- அப்துல் ரகுமான்**

## கலாப்பிரியா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சோமசுந்தரம் |
| காலம் | - | 30 - 07 - 1950 |
| ஊர் | - | திருநெல்வேலி |
| புனைப் பெயர் | - | கலாப்பிரியா |
| இயற்றிய நூல்கள் | - | வெள்ளம், தீர்த்தயாத்திரை, மாற்றாங்கே, எட்டயபுரம், சுயம்வரம், உலகெங்கும் சூரியன், எல்லாம் கலந்த காற்று, நீ நான் மீன் |
| இதழ்கள் | - | தீபம், வாணம்பாடி, கணையாழி, கசடதபற |
| விருதுகள் | - | கலைமாமணி விருது, திருப்பூர் தமிழ்ச் சங்கப் பரிசு, கவிஞர் சிற்பி இலக்கிய விருது, கவிதைக் கணம் வாழ்நாள் சாதனையாளர் விருது |

**சிறப்புகள்:**

- தமிழின் நவீன கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் - கலாப்பிரியா.
- அறிஞர் அண்ணாவின் இரங்கல் கூட்டத்திற்காக முதன் முதலில் கவிதை (இரங்கற்பா) எழுதியவர் - கலாப்பிரியா (எ) சோம சுந்தரம்.
- வண்ண நிலவனின் கையெழுத்துப் பத்திரிக்கையான பொருநையில் கவிதை எழுதும் போது தனக்குத் தானே கலாப்பிரியா என்று பெயர் சூட்டிக்கொண்டார்.
- பாலுணர்வு வெளிபாடுகளும், சில வேளைகளில் வன்முறையும் இவரது கவிதைகளில் கொஞ்சம் தூக்கலாக இருக்கும் என அழைக்கப்பட்டவர் - கலாப்பிரியா.
- நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் வங்கிப் பணிகளுக்கு இடையிலும் தன்னை சுற்றி நிகழும் விஷயங்களை கவிதைகளில் பதிவு செய்தவர் - கலாப்பிரியா.
- மனிதர்களின் மன அழுக்கைத் தோலுரித்துக் காட்டுவனவாக கவிதகைள் இயற்றியவர் - கலாப்பிரியா.

## கல்யாணஜி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கல்யாண சுந்தரம் |
| ஊர் | - | திருநெல்வேலி |
| தந்தையின் பெயர் | - | தி.க. சிவசங்கரன் |
| சிறப்புப் பெயர்கள் | - | வண்ணதாசன் என்ற புனைப் பெயரில் சிறுகதைகளும், "கல்யாண்ஜி" என்ற புனைப் பெயரில் கவிதைகளும் எழுதி வந்தார். |

| | | |
|---|---|---|
| இயற்றிய நூல்கள் | - | புலரி, முன்பின், அந்நியமற்ற நதி (கவிதை), தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், பெயர் தெரியாமல் ஒரு பறவை, சமவெளி, கனிவு, கனவு நீச்சல், கலைக்க முடியாத ஒப்பனைகள் |
| விருதுகள் | - | தமிழக அரசின் கலைமாமணி விருது |

**சிறப்புகள்:**

❖ தீபம் என்ற இதழில் எழுத துவங்கிய இவர் இன்று வரை எழுதி வருபவர் - கல்யாண்ஜி.

## ஞானக்கூத்தன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ரங்கநாதன் |
| ஊர் | - | மயிலாடுதுறை (திருந்தலூரில்) |
| காலம் | - | 1938 |
| இயற்றிய நூல்கள் | - | இரட்டை நிஜங்கள், ஞாதுரு, சூரியனுக்குப் பின்பக்கம், மூலைகள், ஆகஸ்டு 15, உயர் மகாடல் உற்றொரு, கடற்கரையில் சில மரங்கள், நம்மை அது தப்பாதோ, திருப்தி, அன்று வேறு கிழமை, சொன்னதைக் கேட்ட ஜன்னல் கதவு |
| இதழ்கள் | - | கசடதபற மையம், இலக்கிய வட்டம், நடை போன்ற இதழ்களுடன் தொடர்புடையவர் |

❖ கல்கி காலச்சுவடு, உயிர்மை போன்ற இலக்கிய இதழ்களில் சமூக விமர்சன கவிதைகளை எழுதியவர் - ஞானக்கூத்தன்.
❖ ஞானக்கூத்தனின் முதல் கவிதை -பிரச்சனை (1968).
❖ ஞானக்கூத்தன் கவிதைகள் என்ற நூல் வெளியிடப்பட்ட ஆண்டு - 1998.

**கவிதைத் தொகுப்புகள்:**

❖ இரட்டை நிஜங்கள்
❖ நேற்று யாரும் வரவில்லை (1970)
❖ கொள்ளிடத்து முதலைகள் (1970)
❖ வகுப்புக்கு வரும் எலும்புக்கூடு (1970)
❖ அம்மாவின் பொய்கள் (1971)
❖ மண்ணும் மந்திரியும் (1971)
❖ அன்று வேறு கிழமை (1971)
❖ எதிரெதிர் உலகங்கள் (1971)
❖ மீண்டும் அவர்கள்
❖ விடுமுறை தரும் பூதம் (1972)
❖ கனவின் மனிதன் (1972)

- நஷ்டக் கணக்கு (1972)
- காலைநடை (1972)
- பென்சில் படங்கள்
- எட்டுக் கவிதைகள் (1972)
- உள் உலகங்கள் (1972)
- ஞாதுரு (1973)
- யாரே ஒருத்தர் தலையிலே (1973)
- எங்கள் வீட்டு பீரோ (1973)
- வந்தனம் என்றான் ஒருவன் (1973)
- எல்லாமும் முதலில் பாழாய் இருந்தது (1973)
- சூரியனுக்குப் பின்பக்கம் (1974)
- நாலு தலைக்காரன் (1974)
- இரட்டை நிழல் (1975)
- ஆகஸ்டு 15 (1978)
- மழைநாள் பாதை (1978)
- அழிவுப் பாதை (1980)
- அங்கம்மாளின் கவலை (1981)
- மூலைகள் (1981)
- எங்கெங்கும் போவேன் (1981)
- கல்லும் கவலையும் (1981)
- நகர மறுக்கிறது பொழுது... (1981)
- கரப்பானைப் பற்றிக் கொண்டது பல்லி (1981)
- கடற்கரையில் சில மரங்கள் (1981)
- இழந்த பேனாவும் இருக்கும் பேனாவும் (1982)
- காகித வாழ்க்கை (1982)
- எல்லாம் இறுதியில் பழகிப் போய்விடும் (1983)
- தண்ணீர்த் தொட்டி மீன்கள் (1984)
- உயர் மகாடல் உற்றொரு (2009)

## தேவதேவன்

| | | |
|---|---|---|
| ஊர் | - | விருதுநகர் -இராசாகோவில் |
| காலம் | - | 05.05.1948 |
| தந்தை | - | பிச்சுமணி |
| இயற்றிய நூல்கள் | - | குளித்துக் கரையேறாத கோபியர்கள், மின்னற் பொழுதே தூரம், சின்னஞ்சிறு சோகம், விண்ணளவு பூமி, விரும்பியதெல்லாம், தூரம் மாற்றப்படாத வீடு, நுழைவாயிலேயே நின்று விட்ட கோலம், நட்சத்திரமீன், அந்தரங்கத்தில் ஓர் இருக்கை, நார்சிஸஸ் வானம், புல்வெளியில் ஒரு கல், அலிபாபாவும் மோர்ஜியானாவும் |

| | | |
|---|---|---|
| | | (நாடகம்) |
| விருதுகள் | - | திருப்பூர் தமிழ்ச் சங்க விருது, விளக்கு விருது, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி விருது |

**சிறப்புகள்:**

- ❖ தூத்துக்குடி நகராட்சி பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றியவர் - தேவதேவன்.
- ❖ சுந்தர ராமசாமி நடத்தி வந்த காகங்கள் என்ற இலக்கிய உரையாடல் அமைப்பில் பங்காற்றியவர் - தேவதேவன்.
- ❖ ஈ.வே.ராமசாமியால் (பெரியார்) கைவல்யம் எனப் பெயர் சூட்டப்பட்டவர் - தேவதேவன்.
- ❖ தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005 ஆம் ஆண்டிற்கான புதுக்கவிதை வகைப்பாட்டியல் பரிசு பெற்ற நூல் - தேவதேவன் கவிதைகள்.
- ❖ தேவதேவனின் முதல் கவிதைத் தொகுப்பு -குளத்துக் கரையோரத கோபியர்கள் (1982).
- ❖ தேவதேவனின் இரண்டாம் கவிதைத் தொகுப்பு - மின்னற் பொழுது தூரம்.
- ❖ மின்னற் பொழுது தூரத்திற்கும், மேலும் மாற்றப்படாத வீடு என்ற கவிதைத் தொகுப்பிற்கும் முன்னுரை எழுதியவர் - பிரமிள்.
- ❖ தேவதேவன் கவிதைப் பற்றி என்ற உரையாடல் நூலை எழுதியவர் - தேவதேவன்.

## சாலை இளந்திரையன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | வ. இரா.மகாலிங்கம் |
| ஊர் | - | சாலை நயினார்பள்ளிவாசல் - திருநெல்வேலி |
| பெற்றோர் | - | இராமையா, அன்னலட்சுமி |
| காலம் | - | 06 - 09 - 1930 முதல் 04 -10 -1998 வரை |
| இயற்றிய நூல்கள் | - | பூத்தது மானுடம், புரட்சி முழக்கம், உரைவீச்சு, காக்கை விடு தூது, நிற்க நேரமில்லை, நெஞ்சோடு நெஞ்சம், விட்டகுறை தொட்ட குறை, செயல் மணக்கும் தோல்கள், தாய் எழில் தமிழ், தமிழின் ஒரே கவிஞன், தமிழ்க் கணிகள், புதுத் தமிழ் மலர்கள், சுடரேந்திய தமிழ் மலர்கள், கூடன்குளம் கொதிக்கிறது, வீறுகள் ஆயிரம்,அற்புதச் சொற்பிணைப்புகள்! |
| விருதுகள் | - | 1978, 1979ல் தமிழக அரசு விருது, 1991 பாவேந்தர் விருது |
| இதழ்கள் | - | பிரசண்ட விகடன்,சுடர், வீரநடை, அறிவியக்கம் |

**சிறப்புகள்:**

- ❖ களக்காடு தொடக்கப்பள்ளியில் ஆரம்பக் கல்வியையும், தோணாவூரில் நடுநிலைப் பள்ளியிலும் பயின்றவர் -சாலை இளந்திரையன்.
- ❖ சென்னை பச்சியப்பன் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றவர் - சாலை இளந்திரையன்.

- ❖ ஜூலை 1954 முதல் 1957 வரை சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் - சாலை இளந்திரையன்.
- ❖ 1957 ஆம் ஆண்டு மத்திய அரசின் விளம்பர தகவல் ஒளிப்பரப்புத்துறையில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர்-சாலை இளந்திரையன்.
- ❖ 1959 முதல் டில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ்துறை விரிவுரையாளராகி பின் தமிழ்துறைத் தலைவரானவர் -சாலை இளந்திரையன்.
- ❖ உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், டில்லி தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தோன்ற காரணமானவர்-சாலை இளந்திரையன்.
- ❖ டில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர், கவிதைப் படைப்பிலும், திறனாய்விலும் ஒளிவீசித் திகழ்ந்தவர் - சாலை இளந்திரையன்.
- ❖ தொ.போ. மீனாட்சி சுந்தரம், கொண்டல் மகாதேவன், சொக்கலிங்கம் ஆகியோரிடத்தில் கல்வி பயின்றவர் - சாலை இளந்திரையன்.
- ❖ சங்க கால மன்னன் இளந்திரையன் பெயரை தன்னுடைய புனைப் பெயராக கொண்டவர் - சாலை இளந்திரையன்.
- ❖ சென்னையில் சாலை அச்சகத்தை நடத்தியவர் - சாலை இளந்திரையன்.
- ❖ தனிநாயகம் அடிகள் மற்றும் பல தமிழ் அறிஞர்களுடன் இணைந்து உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவியவர் - சாலை இளந்திரையன்.
- ❖ குத்தூசி குருசாமி, நாத்திகன் நந்தனார், மணிமார்பன் உதவியுடன் அறிவியக்கப் பேரவையை உருவாக்கியவர் - சாலை இளந்திரையன்.
- ❖ 1980 ஆம் ஆண்டு தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கான வரைவு திட்டத்தை உருவாக்கி அரசிடம் சமர்ப்பித்தவர் - சாலை இளந்திரையன்.
- ❖ பெரியார், பாரதிதாசன் கொள்கைகளைப் பின்பற்றியவர் - சாலை இளந்திரையன்.
- ❖ "தமிழ் தமிழன் தமிழ்நாடு" எனும் நூலை இயற்றியதற்காக சிறை சென்றவர் - சாலை இளந்திரையன்.
- ❖ இவரது உடல் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்விற்காக வழங்கப்பட்டது.

**மேற்கோள்:**

- சீக்கிரம் செல்லுக நேர்வழியில் -அதைச்
  செத்தைகள் கூடியே தூர்க்குமுன்னே
  கால்கள் இரண்டு படைத்தவன் நீ -பெருங்
  கல்லும் மலையும் கடப்பதற்கே

- "இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி
  என்னென்ன வாகுமோ ஓரிரவில்
  சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே இங்கு
  நல்லசெடி இளைப் பாறிடுமோ? **- நிற்க நேரமில்லை - சாலை இளந்திரையன்**

- "காசைப் பணத்தைப் பணியாதே! - அதன்
  கட்டளை ஏற்றுக் குனியாதே!"

- வாக்குரிமை பெற்றுப்பலர் திரண்டு நல்லவற்றைத் தேக்குவதும்,
  தீயவற்றை நீக்குவதும், இன்றைய நெறி!'

## சாலினி இளந்திரையன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கனக செளந்தரி |
| ஊர் | - | விருது நகர் |
| பெற்றோர் | - | சங்கரலிங்கம், சிவகாமி |
| காலம் | - | 22.12.1933 முதல் 29.04.2000 வரை |
| இயற்றிய நூல்கள் | - | பண்பாட்டின் சிகரங்கள், நாடக நூல்கள் படுகுழி எந்திரக்கலப்பை, புதிய தடங்கள், களத்தில் கடிதங்கள், சங்கத்தமிழரின் மனித நேய நெறிமுறைகள், ஆசிரியப்பணியில் நான், குடும்பத்தில் நான் |
| இதழ்கள் | - | மனித விறு, வீறு நடை |

**சிறப்புகள்:**

- தொடக்கக் கல்வியை மதுரை மற்றும் விருது நகரில் பயின்றவர் - சாலினி இளந்திரையன்.
- சென்னை மாநிலக் கல்லூரியில் 1952 முதல் 1954 வரை பயின்று, தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டம் பெற்றவர் - சாலினி இளந்திரையன்.
- சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிலப்பதிகாரச் சொல்வளம் எனும் தலைப்பில் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு இலக்கிய முனைவர் பட்டம் பெற்றவர் - சாலினி இளந்திரையன்.
- 1956 முதல் 1958 வரை சென்னை பல்கலைக்கழக தமிழ்த் துறையில் தமிழில் வாழ்க்கை வரலாறு, இலக்கியத்தின் தோற்றமும், வளர்ச்சியும் எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு 1973 ல் முனைவர் பட்டம் பெற்றவர் - சாலினி இளந்திரையன்.

**ஆசிரியர் பணி:**

- டில்லி தயாள்சிங் மாலை நேரக் கல்லூரியில் 1951 செப்டம்பர் முதல் 1961 ஏப்ரல் வரை விரிவுரையாளராக பணியாற்றியவர் - சாலினி இளந்திரையன்.
- புது டில்லியில் திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் திருவேங்கடவன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக பணியில் சேர்ந்து முதல்வராக ஓய்வுபெற்றவர் - சாலினி இளந்திரையன்.

**எழுத்துப் பணி:**

- ❖ மணிமேகலைக் காப்பியத்தை ஆய்வு செய்து வாடாமலர் எனும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டவர் - சாலினி இளந்திரையன்.
- ❖ வாடாமலர் எனும் கட்டுரை 1952 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான பரிசைப் பெற்றது.
- ❖ ஆனந்தபோதினி எனும் இதழில் இலக்கியக் கட்டுரைகள் எழுதியவர் - சாலினி இளந்திரையன்.
- ❖ ஆனந்தபோதினி எனும் இதழின் ஆசிரியர் - நாராயண துரைக்கண்ணன்.
- ❖ பண்பாட்டின் சிகரங்கள் (நாடக இலக்கியத் திறனாய்வு) நூலாகும்.
- ❖ **கணவர் சாலை இளந்திரையனுடன் சேர்ந்து எழுதிய நூல்கள்** : இரண்டு குரல்கள், தமிழ்க் கனிகள், தமிழனே தலைமகன், தமிழ் தந்த பெண்கள் இவை நான்கும் இலக்கியக் கட்டுரைகள் ஆகும்.
- ❖ சாலை இளந்திரையன் நினைவு மலர், சாலையாரின் பிளிரல்கள் எனும் நூல்களை எழுதியவர் - சாலினி இளந்திரையன்.

## ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

| | | |
|---|---|---|
| ஊர் | - | சென்னையை அடுத்த ஆலந்தூர் |
| பெற்றோர் | - | ம. கோபால், கோ. மீனாம்பாள் |
| காலம் | - | 01 - 06 - 1942 |
| இயற்றிய நூல்கள் | - | இமயம் எங்கள் காலடியில் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்), நல்ல உலகம் நாளை மலரும்(கவிதைத்தொகுப்பு), கனவுப்பூக்கள் (காப்பியம்),காலக்கிளி, சித்திர பந்தல், பள்ளிப் பறவைகள்(கவிதை நூல்), நினைத்தால் இனிப்பவளே(நாவல்) வைரமூக்குத்தி, புதுமனிதன், யாருக்கு பொங்கல், கயமைக் களைவோம், மனிதனே புனிதனாவாய் (ஐந்து கவிதை நாடகங்கள்) |
| சிறப்புப் பெயர்கள் | - | பாட்டரங்க பாவலர் |

**சிறப்புகள்:**

- ❖ வாழும் கவிஞரான இவர் எண்ணற்ற இசைப்பாடல்களையும் கவிதை நாடகங்களையும் படைத்துள்ளார்.
- ❖ வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை எனும் தலைப்பில் மு.வ. வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் - மோகனரங்கன்.
- ❖ வணக்கத்திற்குரிய வரதராசனார் கதை 1982 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் விருதைப் பெற்றது.
- ❖ தாத்தாவுக்கு தாத்தா எனும் மீனாட்சி சுந்தரனார் வரலாற்றை எழுதியவர் - மோகனரங்கன்.

- மோகனரங்கன் இயற்றிய இமயம் எங்கள் காலடியில் எனும் கவிதை நூல் தமிழக அரசின் விருதைப் பெற்ற நூலாகும்.
- குறும்பா என்னும் பெயரிலும் குறுந்தொகையின் குழந்தைகள் எனும் பெயரிலும் ஹைக்கூ கவிதைகளை எழுதியவர் - மோகனரங்கன்.
- தொன்றுதொட்டு வருகின்ற அடிமைப் புத்தி தொலையட்டும் என்றவர் - மோகனரங்கன்.
- சிந்தித்தேன்! சிந்தித்தேன்! உலக மக்கள் சிந்தையிலே ஒளியில்லை எனக் கூறியவர் - மோகனரங்கன்.